# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, பிப்ரவரி 08, 2025

Weekly E-paper ●February 08, 2025




## இது பெரியாரின் வெற்றியும்....!

சுப.வீரபாண்டியன்

### சட்டாம்பிள்ளை ட்ரம்ப் சாவகாசமாய் மோடி

எழில்.இளங்கோவன்

### நிதியும் இல்லை, நீதியும் இல்லை!

தலையங்கம்

### திருப்பரங்குன்றம் பாஜகவின் நீண்டகாலத் திட்டம்

வழக்கறிஞர் வாஞ்சிநாதன் நேர்காணல்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, பிப்ரவரி 08, 2025 Weekly E-paper ● February 08, 2025


# இது பெரியாரின் வெற்றியும்....!

சுப.வீரபாண்டியன்

எதிரிகள் எல்லோரும் ஒதுங்கிக் கொண்டு, ஓர் உதிரியை மட்டுமே களத்தில் நிறுத்தி இருந்த ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில், எல்லோரும் எதிர்பார்த்தது போலவே தி.மு. கழகம் மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது!

சட்டமன்ற, நாடாளுமன்றப் பொது தேர்தல்கள், இடைத்தேர்தல்கள் என எல்லாவற்றிலும் தி.மு. கழகம் வெற்றி பெறுவது, 2019 ஆம் ஆண்டு முதல் தொடர் நிகழ்வாகத் தமிழ்நாட்டில் அமைந்துள்ளது! அந்தச் சரித்திரம் ஈரோடு இடைத் தேர்தலிலும் தொடர்ந்து இருக்கிறது!

இந்தத் தேர்தலில், தான் இரண்டாவது இடத்திற்கு வந்திருக்கிறேன் என்று ஒரு கட்சி தம்பட்டம் அடித்துக் கொள்வது வேடிக்கையாக இருக்கிறது!

ஓட்டப் பந்தயத்தில் இரண்டாவது இடத்திற்கு வந்திருக்கிறேன் என்று உற்சாகமாக ஓடி வந்த நண்பனைத் தட்டிக் கொடுத்து, கைகுலுக்கி மொத்தம் எத்தனை பேர் ஓடினீர்கள் என்று கேட்ட போதுதான் அந்த இரண்டாவது இடத்தின் லட்சணம் புரிந்தது! மொத்தம் ஓடியவர்களே இரண்டு பேர்தான் என்ற விடையைக் கேட்டு அப்படியே புல்லரித்துப் போவது போலத்தான், ஈரோடு இடைத் தேர்தலிலும் ஒருவர், இரண்டாவது இடத்திற்கு வந்திருக்கிறார்!



**அறிவிக்கப்படாத பல்வேறு கட்சிகள் பின்னணியில் கூட்டணிகளாக நின்றதால், இம்முறை கட்டுத்தொகையை (டெபாசிட்)த் திரும்பப் பெற்று விடுவார்கள் என்றுதான் எல்லோரும் கருதினார்கள். ஆனால் இந்தத் தேர்தலிலும் அவர்களால் கட்டுத்தொகையைக் கூட மீட்டுக் கொள்ள முடியவில்லை!**

இதுவும் கூட அவர் தனித்துப் பெற்ற வாக்குகள் இல்லை! முழுக்க முழுக்க பாரதிய ஜனதா கட்சி "எல்லா வகையிலும்" பின்னால் இருந்தது. அந்தக் கட்சியின் வாக்குகள் முழுமையாக இந்தக் கட்சிக்கு வந்திருக்கின்றன. அதிமுகவின் வாக்குகளிலும் ஒரு பகுதி இவர்களுக்கு கிடைத்திருக்கக் கூடும்! எல்லாம் சேர்ந்தும் 23,000 வாக்குகளை மட்டுமே அவர்களால் பெற முடிந்திருக்கிறது!

அறிவிக்கப்படாத பல்வேறு கட்சிகள் பின்னணியில் கூட்டணிகளாக நின்றதால், இம்முறை கட்டுத்தொகையை (டெபாசிட்)த் திரும்பப் பெற்று விடுவார்கள் என்றுதான் எல்லோரும் கருதினார்கள். ஆனால் இந்தத் தேர்தலிலும் அவர்களால் கட்டுத்தொகையைக் கூட மீட்டுக் கொள்ள முடியவில்லை!

**கழகத்தின் தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர், தலைவர்களுக்கெல்லாம் தலைவர் பெரியார் என்றார் ! ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில், திமுகழகம் மட்டும் வெற்றி பெறவில்லை – தலைவர்களுக்கு எல்லாம் தலைவரான தந்தை பெரியாரும் சேர்ந்து வெற்றி பெற்றிருக்கிறார்!** ●

## அண்ணா நினைவு நாள் புகழஞ்சலி



அண்ணாவின் அன்புமுகம்
அண்ணாவின் அழகுமொழி
அண்ணாவின் பண்புநலன்
அண்ணாவின் எழுத்தாற்றல்
எந்நாளுமம் இம்மண்ணில்
அண்ணாவின் பெயர்வாழும்!
அண்ணாவின் அரும்புகழை
சரித்திரங்கள் குறித்துவைக்கும்

- சுப.வீரபாண்டியன்

# சட்டாம்பிள்ளை ட்ரம்ப் சாவகாசமாய் மோடி

**எழில்.இளங்கோவன்**

அமெரிக்காவின் 47ஆம் அதிபராகப் பதவி ஏற்றுக்கொண்டுள்ள டொனால்ட் ட்ரம்ப்பும், இந்திய ஒன்றியப் பிரதமர் நரேந்திரமோடியும் நெருக்கமான நண்பர்கள் என்று ஊடகங்களும், பத்திரிகைகளும் சொல்லி இருக்கின்றன என்பதை மறப்பதற்கில்லை. அப்படிப்பட்ட நண்பர் தன்பதவி ஏற்பு விழாவுக்குக் கூட மோடியை அழைக்கவில்லை என்பது வேறுவிசயம்.



சட்டவிரோதக் குடியேற்றங்களை வெளியேற்றுவேன் என்று சொன்னார் ட்ரம்ப். அமெரிக்க அரசு, இந்திய ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் 104 பேர்களை நாடுகடத்தி பஞ்சாப்புக்கு அனுப்பியுள்ளது. அதுவும் எப்படி?.. கைகளில் விலங்கிட்டு, கால்களில் விலங்கிட்டு ராணுவ விமானத்தில் ஏற்றி எவ்வித வசதியுமின்றி அனுப்பி உள்ளது. 40 மணிநேரம் வசதியற்ற சூழலில் சோர்ந்துபோன அவர்கள் அமிர்தசரஸ் விமான நிலையம் வந்தடைந்தார்கள். இதற்கு நாடாளுமன்றத்தில் விளக்கம் தந்த வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் 'சட்டவிரோதக் குடியேற்றக் காரர்களை 2012 ஆம் ஆண்டு முதல் விலங்கிட்டு அனுப்புவது நடைமுறைதான்' என்று கூறுகிறார்.

இந்நாட்டுக் குடிமக்களை அமெரிக்கா இப்படி நாடு கடத்தியிருப்பது அப்பட்டமான மனித உரிமை மீறல். இதற்காக இந்திய ஒன்றியம் கண்டனம் செய்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் டில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரை அழைத்து இதுகுறித்து விளக்கமாவது கேட்டு இருக்க வேண்டும். 'இனி இதுபோல விலங்கு அணிவிக்க வேண்டாம் என்று அமெரிக்காவிடம் கூறுவோம்' என்று அமைச்சர் ஜெய்சங்கர் பட்டும்படாமலும் கூறியிருக்கிறார்.

மெக்சிகோவை அமெரிக்க வளைகுடாவாக ஆக்குவேன், மெக்சிகோ - கனடா-சீனாவுக்குக் கடுமையாக வரிவிதிப்பேன், கனடாவை அமெரிக்காவின் மாகாணமாக ஆக்குவேன், காசாவைக் கைப்பற்றுவேன் என்று சட்டாம்பிள்ளையைப் போல பேசிய ட்ரம்ப்புக்கு அந்தந்த நாடுகள் எதிர்வினையாற்றிப் பதிலடி கொடுத்துக் கொண்டு இருக்கின்றன.

அப்படியிருக்க இந்தியர்களைத் திருப்பி அனுப்புவேன் என்று ட்ரம்ப் சொன்ன உடனே 'ஏற்றுக்கொள்கிறோம்' என்று சொன்ன மோடி, அவர்களை அழைத்துவர விமானத்தையாவது அனுப்பி இருக்கலாமே!

மணிப்பூரானாலும், அமெரிக்காவானாலும் பிரதமர் மோடி வாயே திறக்கமாட்டார் போலிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகளின் கடும் வற்புறுத்தலினால் வேறுவழியின்றி விளக்கம் அளித்து உள்ளார் அமைச்சர் ஜெய்சங்கர், அதுவும் பொத்தாம் பொதுவாக.

அதானியின் நிறுவனங்களின் முறைகேடுகள் குறித்து அமெரிக்க நிறுவனம் செய்தி வெளியிட்டதற்குத் துள்ளிக் குதித்த ஒன்றிய அரசு, அமெரிக்காவில் சட்டவிரோதக் குடியேற்றம் என்று திருப்பி அனுப்பப்பட்ட இந்தியக் குடிமக்கள் கைகளில், கால்களில் விலங்கு பூட்டி விமானத்தில் அனுப்பப்பட்ட நிலையில், அந்தக் காட்சிப் படத்தை அமெரிக்க எல்லை பாதுகாப்புப் படையினர் வெளியிட்டிருக்க, அதற்குக் கண்டனம் தெரிவிக்காமல் அமைதியாக இருப்பது இந்திய ஒன்றியத்தின் இறையாண்மைக்கு இழுக்கு! ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## நிதியும் இல்லை, நீதியும் இல்லை!

இரண்டு நாள்களுக்கு முன்னர் நெல்லையில் மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் பேசும்போது "ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாட்டுக்கு நிதியும் இல்லை, நீதியும் இல்லை. தமிழகத்திற்கு நிதி தராமல் மத்திய அரசு வஞ்சிக்கிறது" என்று பேசி இருக்கிறார்.

நாட்டில் நேரடி வரி வசூலில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடுதான் அதிகமான பங்களிப்பைத் தருகிறது.

தமிழ்நாடு வரியாக ஒரு ரூபாய் கொடுத்தால், திருப்பி ஒன்றிய அரசு 29 காசுகள் மட்டுமே தருகிறது. ஆனால் பா.ஜ.க. ஆளும் உத்தரப் பிரதேசத்திற்கு (ஒரு ரூபாய்க்கு) 2 ரூபாய் 73 காசுகள் கொடுக்கிறது ஒன்றிய அரசு.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல்வெள்ளப் பேரிடர் நிவாரண நிதியாக ரூபாய் 4700 கோடி வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் கோரிக்கைகளுக்கு வெறும் 450 கோடியை மட்டுமே தந்தது ஒன்றி அரசு.

"ஜிஎஸ்டி வரிமுறையால் தமிழ்நாட்டிற்கு மட்டும் 20 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. அவசர அவசரமாக ஜிஎஸ்டி முறையை அமல்படுத்தியதே இதற்குக் காரணம்" என்கிறார் திருச்சி சிவா.

தமிழ்நாடு நிதியைக் கேட்டால், புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள் நிதிதருகிறோம் என்று சொல்கிறது ஒன்றிய அரசு.


ஒன்றிய அரசின் காவிச் சாயத்தை தமிழ்நாடும், தமிழர்களும் முற்றாகப் புறமொதுக்குவதால், கருப்பு நிறத்தை வஞ்சகத்தால் வஞ்சிக்கிறது காவி ஒன்றிய அரசு.

"அல்வான்னா திருநெல்வேலி அல்வா. மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு கொடுப்பதும் அல்வாதான்" என்று தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 'அல்வா புகழ்' நெல்லை மண்ணில் நின்று கொண்டு இப்படிச் சொல்கிறார் என்றால் அதில் பொருள் இல்லாமல் இல்லை!

தமிழ்நாட்டிற்கு "நிதியும் இல்லை, நீதியும் இல்லை". இருப்பது 'திராவிட மாடல்'ஆட்சி !

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



**மொழிப்போர் தியாகிகள் நாளை (25.01.25) முன்னிட்டு கடந்த பிப்ரவரி 2 அன்று சென்னையில் 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்த இடங்களைச் சுற்றிப் பார்க்கும் பயணமாக திராவிடப் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற திராவிட நடை (Dravidian walk) நடைபெற்றது. நிகழ்வினை திராவிட இயக்க எழுத்தாளர் கோவி. லெனின், திராவிடர் கழகத் துணைப் பொதுச் செயலாளர் பிரின்ஸ் என்னாரெஸ் பெரியார், திராவிடப் பள்ளி இணை ஒருங்கிணைப்பாளர் வெற்றிச்செல்வன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.**

# திருப்பரங்குன்றம்

# பாஜகவின் நீண்டகாலத் திட்டம்

## வழக்கறிஞர் வாஞ்சிநாதன் நேர்காணல்

**திருப்பரங்குன்றத்தில் இன்றைய பிரச்சனை குறித்த வரலாற்றுப் பூர்வமான சான்றுகள் என்ன?**

பதில்: திருப்பரங்குன்றம் மலை சங்க இலக்கியத்தில் 'பரங்குன்றம்' என்று அழைக்கப்பட்டது. இம்மலைக்கு மிக முக்கியமான வரலாற்றுச் சிறப்பு உண்டு. பல்வேறு மதங்கள், பண்பாடுகளின் கூட்டுக் கலவையாக, மத நல்லிணக்கத்திற்கு முன்மாதிரியாக ஓர் இடம் உண்டு என்றால் அது திருப்பரங்குன்றம். குறிஞ்சி நிலத் தலைவன் முருகனுக்கு இம்மலையில் கோயில் இருக்கிறது. சைவ சமயக் கடவுள் சிவனுக்குக் கோயில் இருக்கிறது. சமணர் படுகைகள், சிற்பங்கள் உள்ளன. 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் பிராமி கல்வெட்டுகள் உள்ளன. பரங்குன்றம் என்ற பெயரை ஸ்கந்தர் மலை என்று மாற்றியது ஆரியப் பார்ப்பனியம். முருகனுக்கு ஆடு பலி கொடுத்து வெறியாட்டுதல் நிகழ்வு நடத்தப்படுவது தமிழ் மரபு. அதன்பின் தமிழ்ச் சமயங்களைக் கைப்பற்றிய பார்ப்பனியம் முருகனைச் சுப்பிரமணியன் என்று மாற்றியது. கொற்றவை என்ற தாய் தெய்வத்தை துர்கா தேவி என்று பெயர் மாற்றம் செய்தது.



திருப்பரங்குன்றம் மலையில் சிக்கந்தர் என்ற இஸ்லாமியத் துறவி மலைமேல் சென்று வாழ்ந்து அங்கேயே மறைந்த பின்னர், சிக்கந்தர் மலை, சிக்கந்தர் பள்ளிவாசல் என்று மக்கள் அழைத்திருக்கிறார்கள். சிக்கந்தர் மலை என்ற பெயர் அரசு ஆவணங்களில் மிகத்தெளிவாகப் பதியப்பட்டிருக்கிறது. குறிப்பாக, 1815 ஆம் ஆண்டு மதுரை தொடர்பான வருவாய் ஆவணங்களில் சிக்கந்தர் மலை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோயில் நிர்வாகம் தொடர்பான வழக்கில், ராம் அய்யர் என்பவரால் 1923 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பில், இஸ்லாமியர்களுக்குப் பள்ளி வாசல், நெல்லித்தோப்பு உள்ளிட்ட பகுதிகள் இஸ்லாமியர்களுக்குச் சொந்தமானது என்று தெளிவாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பிரிவி கவுன்சிலும் இத்தீர்ப்பை உறுதிப்படுத்தியது. கோயிலுக்குச் சொந்தமான இடம் எது, இஸ்லாமியர்களுக்குச் சொந்தமான பகுதி எது என்று தீர்ப்புகளில் தெளிவாக வரைவறை செய்யப்பட்டுள்ளது. அவரவர் பகுதிகளில் அவரவர் வழிபாடுகளைச் செய்ய அந்தந்த மதத்தவருக்கு உரிமை உண்டு.

**தற்போது பாஜக எழுப்பியுள்ள பிரச்சினை அக்கட்சியின் நீண்டகாலத் திட்டமா? அவ்வளவு பேர் அங்கு கூட்டப்பட்டது எப்படிச் சாத்தியமானது?**

பதில்: கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, திருப்பரங்குன்றம் மலையில் தர்கா அருகில் உள்ள சர்வே கல்லில் நாங்கள் கார்த்திகை தீபத்தை ஏற்றுவோம் என்று இந்து முன்னணி தொடர்ந்து பிரச்சினை செய்து வருகிறது. திருப்பரங்குன்றம் கோயிலைப் பிரச்சினையாக்க வேண்டும் என்பது அவர்களது நீண்டகாலத் திட்டத்தில் ஒன்று. ஆனால் உள்ளூர் மக்கள் எந்த ஆதரவும் தராததால் அத்திட்டம் நிறைவேறவில்லை. தற்போது 2026 தேர்தலில் திருப்பரங்குன்றம் தொகுதியை பாஜக குறிவைத்துள்ளது. அதனால்தான் இப்பிரச்சினை திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாஜகவின் தொடர்ச்சியான செயல்பாடு உளவுத்துறைக்குத் தெரிந்தே நடந்திருக்கிறது. மக்கள் திட்டமிட்டு அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள். பாஜகவின் திட்டத்தினைத் தடுப்பதற்கான எந்தவொரு செயல்திட்டமும் அரசிடமோ காவல்துறையிடமோ இல்லை. முற்போக்கு இயக்கங்களை காவல்துறையும், அரசு நிர்வாகமும் பல்வேறு இடங்களில் தடுக்கிறது. ஆனால் சங் பரிவார் கூட்டத்தை எந்த இடத்திலும் தடுப்பதில்லை. அவர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. நேற்று முந்தினம்கூட கோயிலில் நுழைந்து, பாஜக கொடியை ஏந்தி, பாரத் மாதாகி ஜே என்று கோஷமிட்டிருக்கிறார்கள். அவர்களைக்கூட இன்றுவரை காவல்துறை ரிமாண்ட் செய்யவில்லை என்பதுதான் வருத்தத்திற்கு உரியது. அதேநேரம் பழங்காநத்தத்தில் நடைபெற்ற கூட்டத்தில், அயோத்தியைப் போல இதை மாற்றுவோம் என்று ஹெச். ராஜா. இராம.சீனிவாசன் போன்றோர் பேசியிருக்கிறார்கள். ஹெச். ராஜாவை இதுவரை கைது செய்யவில்லை.

**இந்துத்துவம் தொடர்ந்து விதைக்கப்பட்டு வரும் சூழலில், தமிழ்நாடு அரசின் செயல்பாடு என்னவாக இருக்க வேண்டும்?**

பதில்: கடந்த பத்தாண்டுகள் நடைபெற்ற அதிமுக ஆட்சியில், காவிச் சிந்தனை உடைய அதிகாரிகள் அனைத்து மட்டங்களிலும் பரவலாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது வேலையைக் காட்டுகிறார்கள். திருப்பரங்குன்றத்தில் முதலில் பிரச்சினையைத் தொடங்கியது, திருப்பரங்குன்றம் காவலர்கள்தான். இஸ்லாமியரின் மத வழிபாட்டு உரிமையைத் தடுத்தார்கள். அதனைத் தொடர்ந்து, வட்டார வருவாய் அலுவலரும் பெரும்பான்மையினர் வருத்தமடைவர் என்ற வார்த்தையைப் பேசுகிறார். இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் அங்கு ஆடு, கோழி பலியிடக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவிக்கிறார். நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞரும் அசைவம் சாப்பிட்டவர்கள் மீது எஃப்.ஐ. ஆர். போடப்பட்டுள்ளது என்கிறார். அங்கு அசைவம் சாப்பிடும் வழக்கம் காலம் காலமாக இருந்து வருகிறது, அசைவம் சாப்பிடுவது தவறல்ல என்று சொல்லியிருந்தால் அப்பிரச்சினை முடிந்திருக்கும். ஆனால் அரசு அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் உட்பட பிரச்சினை செய்வோருக்கு உடந்தையாக இருக்கிறார்கள். இன்றுவரை ஹெச். ராஜா கைது செய்யப்படவில்லை என்பதே அதற்குச் சான்று. எனவே தமிழக முதல்வர் இதில் நேரடியாகத் தலையிட்டுத் தீர்வுகாண வேண்டும். திமுக சார்பில் பகுத்தறிவுப் பிரச்சாரங்களை முன்னெடுக்க வேண்டும். மத நல்லிணக்கத்திற்கான குழுக்களை எல்லாப் பகுதிகளிலும் அமைக்க வேண்டும்.

நேர்காணல்: வெற்றிச்செல்வன்

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian